இதனைப்பற்றி என்ன? ....

# அப்போஸ்தலர் விசுவாச அறிக்கை

## கிறிஸ்தவ விசுவாசத்திலே அறிக்கையிடுதல் என்பதன் அர்த்தம் என்ன?

தேவனுடைய வார்த்தையையும் அவரது வாக்குத்தத்தையும் தவிர வேறு எதுவுமே இந்த வாழ்விலே நிச்சயமோ அல்லது உறுதியானதோ அல்ல. அப்போஸ்தலர் விசுவாச அறிக்கையின் வார்த்தைகளிலே காலம்காலமாக கிறிஸ்தவர்கள் அவர்களுக்கான தேவனுடைய வார்த்தைக்குப் பதலீடுகொடுத்துவந்துள்ளனர். சங்கீதக்காரனுடன் நாம் ஜெபிப்பது, "ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்" (சங். 51:15). விசுவாச அறிக்கையின் ஆங்கிப்பதமான 'கிறீட்' என்பது "கிரேடோ" எனும் லத்தீன் வார்த்தையில் இருந்து வந்தது, அதன் அர்த்தம் "நான் நம்புகிறேன்" என்பதாகும். "அறிக்கையிடுதல்" என்பது ஒருவர் தான் நம்புவது என்ன என்பதைப் பிரகடனப்படுத்துவதாகும். நாம் அப்போஸ்தலர் விசுவாச அறிக்கையின் வார்த்தைகளிலே கிறிஸ்தவ சபையின் விசுவாசத்தை அறிக்கையிடும்போது, பரிசுத்த திரித்துவம் யார் என்பதையிட்ட எமது நம்பிக்கையையும், எமக்குத் தேவன் என்ன செய்துள்ளார் என்பதையும் நாம் அறிக்கையிடுகிறோம். அப்போஸ்தலர் விசுவாச அறிக்கையின் ஒவ்வொரு பகுதியும் அல்லது ஷரத்தும் பரிசுத்த திரித்துவத்தின் நபர்களுள் ஒருவரின் பணியைப்பற்றிப் பேசுகிறது: பிதா, குமாரன், பரிசுத்த ஆவி. அப்போஸ்தலர் விசுவாச அறிக்கையின் ஒவ்வொரு ஷரத்தும் தேவனுக்கும், ஒருவர் ஒருவருக்கும், திரியேக தேவனின் கிரியைகளைப்பற்றி நாம் பேசும் எமது வாய்ப்பாகும். அந்தக்கிரியைகளாலேதான் எம்மை அவர் உருவாக்கினார், எம்மை அவர் இரட்சித்தார், நித்திய வாழ்வுவரைக்கும் எம்மை ஒரே விசுவாசத்திலே காத்துவருகிறார். தேவனுக்கான எமது விசுவாசத்தினதும் ஆராதனையினதும் மிக முக்கியமான ஒரு பரிமாணம் இதுவாகும்.

## பிதாவாகிய தேவனைப்பற்றி நாம் அறிக்கையிடுவது என்ன?

**"வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை நான் விசுவாசிக்கிறேன்."**

நாம் யாவருமே வானத்தையும் பூமியையும் படைத்த ஒரே மெய்த்தேவனை *நம்புகிறோம். நாம் அவரை "எமது பிதாவே" எனக் கூறும்படி அவர் செய்துள்ளார்; எமக்கு அவர் பிள்ளைகளின் ஸ்தானம் தந்துள்ளார். எப்போதுமே எம்மைப் போஷிப்பதாக அவர் பிரதிக்ஞை செய்துள்ளார்; சரீரம், ஆத்தமாவை அவர் போஷாக்கூட்டி வைத்திருப்பார். நாம் தழைத்தோங்குப்படியாகச் சகல தீமைகளின் ஊடாகவும் அவர் எம்மை வழிநடாத்தி, நன்றாகப் பாதுகாப்பர். அவர் இரவும் பகலுமாய் எமக்காகக் கரிசினை கொள்வதுடன் அனைத்தையும் அவரது முழு வல்மையினாலும் ஆளுகை செய்கிறார்.* [1]

சகல காரியங்களையும்பற்றி வெறும் யதார்த்தங்களில் இருந்தே சகல மானிடப்பிறவிகளுக்கும் தேவன் ஒருவர் உண்டு எனும் உண்மை அறியப்பட்டுள்ளது. இது தேவனைப்பற்றியதான இயற்கை அறிவு என அழைக்கப்படும். தேவன் ஒருவர் உள்ளார் என்பதை நம்புவதைப்பற்றி எதுவும் பெரிதாகச் சொல்வதற்கில்லை. மடையன்தான் (மதிகேடன்) 'தேவன் இல்லை' என்று சொல்லுவான் (சங். 53:1). மெய்யான பிரச்சினை மககள் தேவன் இல்லை என நம்புவதல்ல, ஆனால் அவர்கள் உண்மையான தேவன் அல்லாத ஒரு தேவனிலே நம்பிக்கை கொள்ளும்படி சோதிக்கப்படுவதே. அல்லது, மெய்யான கடவுளின் ஸ்தானத்திலே அவரகள் எமது கலாச்சாரத்தின் தேவன்களை, அதாவது பணம், வெற்றி, பிரபல்யம், களியாட்டம் போன்றவைகளை இருத்த முனைவதே.

அப்போஸ்தலர் விகவாச அறிக்கையின் முதலாவது ஷரத்தானது கிறிஸ்தவர்கள் நம்பி, கற்பித்து அறிக்கையிடுவது என்னவென்றால், ஒரேயொரு மெய்த்தேவனே இருக்கிறார் என்றும் அவர்தான் வானங்களையும் பூமியையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்தவர் என்பதுமாகும். ஆனால் அதைவிடவும் மேலாக, அவர் எங்கள் பிதா. தந்தை தன் பிள்ளைகளைக் கவனிப்பதுபோல அவர் எமக்குக் கரிசினையை வழங்குகிறவர்.

அவரே நம்மை உண்டாக்கினார் என்பதையும், இந்த வாழ்வில் நாம் கொண்டுள்ள அனைத்து நன்மையான காரியங்களையும் அவரே நமக்குத் தந்துள்ளார் என்பதையும் நாம் நம்புகிறோம். இதனை அவர் அவரது அன்பின் நிமித்தமாக மாத்திரமே செய்துள்ளார். எமக்கு அவர் பிதாவாக இருக்கிறார். அவர் எமக்கு ஜீவனை வழங்குவது மாத்திரமல்ல, இந்த வாழ்விலே எம்மை தற்காத்து, பாதுகாத்து, காவல் செய்கிறார் அதன்மூலமாக அவரோடே நாம் பரலோகத்திலே நித்தியத்திலே இணையும்படியாக. தேவன் நமக்குத் தடும் நன்மையான ஈவுகளுக்கு எம்மைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கும் எதுவுமே எம்மிலே கிடையாது. வானத்தையும் பூமியையும் படைத்த அதே தேவன்தான் எம் ஒவ்வொருவரையும் படைத்து, தனிப்பட்ட ரீதியிலே எம்மைப் பரிகரிக்கிறார் என்பதை அறிவது என்னே மகிமையானதோர் விடயமாக இருக்கிறது.

## தேவனுடைய மைந்தனைப்பற்றி நாம் அறிக்கையிடுவது என்ன?

**"அவருடைய ஒரே மைந்தனாகிய இயேசுக்கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் தூய ஆவியினால் கன்னிமரியிடம் கருத்தரித்து மனிதனானார். நமக்காகப் பொந்தியு பிலாத்துவின் காலத்திலே சிலுவையிலே அறையுண்டு மடித்து அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்துக்கு இறங்கி மூன்றாம்நாள் மரித்தோரினின்று உயிர்த்தெழுந்தார். அவர் பரலோகத்துக்கு எழுந்தருளி சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கத் திரும்பவும் வருவார்."**

*நாம் அவரது மைந்தனாகிய கிறிஸ்துவிலே நம்பிக்கை கொள்கிறோம். அவரை நாம் கர்த்தர் என்று அழைக்கிறோம். அவர் ஒரே தேவத்துவமும், சிங்காசனமும், வல்லமையும் சகல கிருபைகளினதும் ஆசிர்வாதங்களினதும் ஊற்றுமாக இருக்கிறவர். கன்னித்தாயான மரியாளிடம் அவர் பரிசுத்த ஆவியின் வல்லமையால் பிறந்து, மெய்யான மனிதனாக, எமது மானிட சகோதரனாக ஆனார். அவர் மூலமாகவே நாம் அவரது புத்திரத்துவத்தைச் சுவீகரிக்கிறோம். அவர் மனிதரின் பாவங்களுக்காக சிலுவையில் அறையுண்டு, தேவனுடைய வல்லமையினால் மீளவும் உயித்தெழுந்தார்.*

நாம் பிதாவாகிய தேவனிலே நம்பிக்கை கொள்ளக்கூடுமாய் இருப்பது சாத்தியமாக இருப்பதற்குக் காரணம், எமது இரட்சகரான இயசுக்கிறிஸ்து, அவரது மைந்தன், இந்த உலகிலே செய்யும்படி வந்த காரியத்தின் நிமித்தமாகவே: எமது ஸ்தானத்திலே பூரணமாக வாழ்ந்து, உலகின் பாவத்துக்காக பாடுபட்டு மரித்து, பின்பு மனுக்குலத்தின் மிகவும் பண்டையதும் மிகவும் தீங்கானதுமான எதிரிகளாம் பாவம், மரணம், பிசாசு என்பவற்றின்மீது வெற்றிகரமாக உயிர்த்தெழுந்தமை.

பரிசுத்த திரித்துவத்தின் இரண்டாம் ஆளான இயேசுக்கிறிஸ்து, அனைத்து நித்தியம் தொடக்கம் தேவனுடைய மைந்தனாக இருக்கிறவர், தனது விலைமதிப்பற்ற சரீரத்தையும் இரத்தத்தையும் உலகின் பாவங்களுக்காகப் பிதாவுக்குப் பலியிட வந்தார். சகல மானிடர்களினதும் பொதுவான பாவத்தாலும் எம்

# அப்போஸ்தலர் விசுவாச அறிக்கை பற்றி என்ன?

ஒவ்வொருக்கும் தனித்துவமான பாவத்தாலும் சமாதானமானது சிதறிப்போயிருந்ததால், இந்தப் பலிமூலமாகத் தேவனுடைய மைந்தனானவர் நமக்கு தேவனுடன் ஒப்புரவினையும் சமாதானத்தையும் வெற்றிசிறந்தார்.

பிதாவின் கட்டளையின்படி கிறிஸ்து இவையனைத்தையும் எமக்காகச் செய்யும்படியாக இந்த உலகத்துக்கு வந்தார். அதனூடாக, விசுவாசத்தால் நாம் அவருக்குச் சொந்தமாகி, அவரைச் சேவித்து அவருக்காக வாழும்படியாக அப்படிச் செய்தார். கல்லறையினின்று உயிர்த்தெழுந்து இன்று சகல நித்தியத்துக்கும் எமது இரட்சகராக வாழ்ந்துவரும் அவரிலேயே எமது நம்பிக்கை உள்ளது. இயேசுக்கிறிஸ்து உலகின் இரட்சகர் எனும் அறிவுக்கு நாம் இட்டுச்செல்லப்பட்ட நாம் எத்துனை ஆசீர்வாதம் பெற்றவர்கள். அத்துடன் அவருக்குள்ள நாம் நிறைவைக் கொண்டவர்களாக, எமது பாவங்களில் இருந்து இலவசமான மன்னிப்பைப் பெற்றுள்ளதுடன், பரலோகத்திலே அவருடன் நித்திய வாழ்வு பற்றிய வாக்குத்தத்தையும் பெற்றுள்ளோம்.

## பரிசுத்த ஆவியைப்பற்றி நாம் அறிக்கையிடுவது என்ன?

**நான் பரிசுத்த ஆவியையும், பரிசுத்த கிறிஸ்தவ சபையையும், பரிசுத்தவான்களின் ஐக்கியத்தையும், பாவ மன்னிப்பையும், சரீர உயிர்த்தெழுதலையும் நித்திய ஜீவனையும் விசுவாசிக்கிறேன்."**

*ஆறுதலையும், கிருபையையும் வல்லமையையும் அருளும் பரிசுத்த ஆவியானவரை நாம் அறிக்கையிடுகிறோம். அவர் பிதாவோடும் குமாரனோடும் வெற்றிவாகைசூடும் நேரத்துக்காக எம்மை அணிவிக்கிறார், சபையை, அவரது சொந்த சிருஷ்டிப்பை, ஆவியின் மெய்யான ஐக்கியத்திலே பேணிப் பாதுகாக்கிறார்; அங்கே பாவமன்னிப்பும் இரட்சிப்பும் இயேசுவின் புண்ணியத்தால் எமக்கு வருகிறது. சரீர உயிர்த்தெழுதல், அப்போது நாம் தேவனுடன் நித்திய வாழ்விலே இருப்போம், ஆமென்.*

தூய திரித்துவம், பிதா குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர், ஒரே தேவன், மூன்று ஆட்கள், கனத்திலும் தன்மையிலும் சமமானவர்கள், எம்மை அவரது சொந்தப் பிள்ளைகளாக உண்மையிலேயே நேசிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் எம்மைத் திரித்துவத்துடனான ஐக்கியத்துக்குள் அழைக்கிறார், தேவன் நமக்கு அருளிய வல்லமையான கிருபைநிறை ஈவின் வழிமுறையினால்: வார்த்தை மற்றும் திருவருட்சாதனங்கள். வார்த்தையுடனும் திருவருட்சாதனங்களுடனும், அவர் பூமியில் உள்ள முழுச் சபையையுமே ஒரே மெய்யானதும் இரட்சிப்பதுமான விசுவாசத்திலே வைத்திருக்கிறார்.

லூத்தர் தனது பெரிய வினாவிடைபோதினியிலே விளக்குவதைப்போல பரிசுத்த ஆவியானவர் எமது வாழ்விலே சபையினூடாகப் பணியாற்றுகிறார், ஏனெனில் சபைதான் "ஒவ்வொரு கிறிஸ்தவனையும் தேவனுடைய வார்த்தையினால் பிறப்பித்து தாங்கும் தாயாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் அந்த வார்த்தையை வெளிப்படுத்திப் பிரசங்கிப்பதன்மூலம் அவர் ஒளிர்வித்து, இருதயங்களை அனல்மூட்டிவிடுகிறார். அதன்மூலம் அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டு, பற்றிக்கொண்டு, தழுவிக்கொண்டு அதிலே நிலைத்து நிற்பார்கள்." சபையிலே, தேவனுடைய ஆவியானவர் தினந்தோறும் செழிப்பான அளவுகளிலே பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பொழிந்து வருகிறார், அதன்நிமித்தமாக கடைசி நாளிலே நாம் மரணத்தில் இருந்து எழுந்து நித்திய வாழ்விலே கிறிஸ்துவுக்குள்ளான அனைத்து விசுவாசிகளுடனும் இணைவது சாத்தியமாகிறது. தினந்தோறும் நாம் பரிசுத்த ஆவியாகிய தேவனுக்கு, எமது வாழ்வுகளிலே அவரது பணிக்காக நன்றிகூறித் துதிக்கிறோம்.

## ஏன் நாம் விசுவாச அறிக்கைகளைப் பயற்படுத்துகிறோம்?

சில சபை அலகுகள் விசுவாசத்தின் முறையான கூற்றுக்களைக் கூறுவதினின்று வெட்கிப் பின்வாங்குவதுண்டு. லூத்தரன் சபையானது சரித்திரபூர்வமான, சர்வலோகமான (ஒருமைப்பாட்டு) விசுவாச அறிக்கைகளைப் பயன்படுத்திடத் தயங்குவதில்லை. நாம் அப்போஸ்தல விசுவாச அறிக்கை, நைசிய அறிக்கை மற்றும் அத்தனேசியன் அறிக்கை ஆகியவற்றைப் பயன்படுத்துகிறோம். இந்த மூன்று பண்டைய விசுவாச அறிக்கைகளும் கிறிஸ்தவ சபையிலே நாம் ஒரே மெய்யான விசுவாசத்தை அறிக்கையிட, அவை கிறிஸ்துவுக்குள் சகல காலமும் சகல விசுவாசிகளுடனும் இனங்காண எமக்கு உதவுகிறது.

சரித்திரபூர்வமான விசுவாச அறிக்கைகள், எமது சபையானது அண்மைய மாநாட்டிலே கூறியதைப்போல, "எந்த ஒரு தனி நபரினதும் புலப்படுத்தல்களாய் இராமல், காலங்களூடாக முழு சபையையும் நெஞ்சாரப்போற்றிப் பற்றிக்கொண்ட சொத்துக்களாகும். சபையானது இந்த விசுவாக அறிக்கைகளின் அறிக்கையிடல்களைப் பேணிவந்துள்ளதுடன், அவற்றிலே அறிக்கையிடப்பட்ட விசுவாசத்தை மறுதலிப்பதற்குப்பதிலாக இரத்தசாட்சியாக மரித்தும் உள்ளது." எனவே, சரித்திரபூர்வமான கிறிஸ்தவ விசுவாச அறிக்கையானது லூத்தரன் ஆராதனையின் மிக முக்கியமானதோர் பகுதியாகும். தனிப்பட்ட, நபர்சார் விசுவாசக் கூற்றுக்கள் அநேகமான தடவைகளிலே சபையின் திருத்தமற்ற பிழையான அறிக்கையிடல்களாக இருக்கக்கூடும் என்பதால், சபையின் பொது ஆராதனைகளிலே விசுவாசத்தின் முறைசாராக் கூற்றுக்களின் பயன்பாட்டை நாம் ஊக்குவிப்பது கிடையாது.

விசுவாச அறிக்கைகள் தேவனுடைய வார்த்தை கற்பிப்பதைச் சபையானது தொடர்ச்சியாக நம்புவதை உறுதிப்படுத்துவதற்கும் உள்ளது. தேவனுடைய வார்த்தையில் உள்ள திரவியங்களே நாம் அறிக்கையிடவிரும்புவதும் சபையாக அதற்கான நிலைப்பாட்டை எடுக்க விரும்புவதும் ஆகும். இந்த சத்தியங்களின் அடிப்படையிலேதான், அப்போஸ்தலர் விசுவாச அறிக்கையிலே அறிக்கையிடுகிற பிரகாரமாக தேவனுடைய ஜனங்கள் வார்த்தையினாலும் கிரியையினாலும் அவரைச் சேவிக்கும்படியாக நடாத்தப்படுகின்றனர்.

நாம் அப்போஸ்தலர் விசுவாச அறிக்கையையும் ஏனைய சரித்திர அறிக்கைகளையும் அறிக்கையிடும்போது, நாம் கிறிஸ்தவ சபையின் விசுவாசத்தை அறிக்கையிடுகிறோம். அதனை நாம் களிப்புடனும் உறுதியுடனும் செய்கிறோம். இந்த வார்த்தைகள் எமது உதடுகளிலும் எமது இதயங்களிலும் இருக்க, நாம் தேவனுக்கு சத்தியங்களை மீளவும் பேசுகிறோம் எனும் உறுதிப்பாட்டை நாம் கொண்டிருக்கிறோம். அவர் முதலிலே எமக்குப் பேசினார். எனவே கர்த்தருடைய நிச்சயமும் உறுதியுமான வார்த்தையிலே நாம் உறுதிபடக்கூறுவது, "இது மிக நிச்சயமாகவே மெய்தான்."

1. மாட்டின் லூத்தர், நாம் அனைவரும் ஒரே மெய்யான தேவனிலே நம்பிக்கை கொள்கிறோம் *We All Believe in One True God,* லூத்தரன் ஆராதனையிலே பாடல் 213 (பரி. லூயி: கொங்கோடியா பதிப்பகம், St. Louis: Concordia Publishing House 1982)

கலாநிதி A.L. பர்றி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை